# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF MAHILA COURT, PERAMBALUR.

Calendar
Miscellaneous

Preliminary Register
**Sessions**

**Sessions Case No. 12 : 2022**

**Deposition of witness for**

| | | |
|---|---|---|
| **Prosecution** | : | **P.W. : 1** |
| Defence | : | D.W. : |
| Court | : | C.W. : |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மாரியம்மாள் | வயது | : | |
| த/பெ. (அ) | : | | தொழில் | : | |
| க/பெ. | | ராமசாமி | | | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | ஜாதி | : | |
| மாவட்டம் | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of 20/06/2022**
**Starting Time:12.15PM**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது துறையூர் பெருமாள்மலை அடிவாரத்தில் குடியிருந்து வருகிறேன். என் கணவர் கூலி வேலை செய்து வருகிறார்.எனக்கு சம்பூரணம், சின்னப்பொண்ணு என இரண்டு பெண்பிள்ளைகளும், பலராமன் என்ற மகனும் பிறந்தனர். என் மூத்த மகள் சம்பூரணத்தை எசனை கிராமத்தில் வசிக்கும் ரெங்கசாமி மகன் ராஜா என்பவருக்கு சுமார் 12 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்து கொடுத்தேன். என் மகள் சம்பூரணத்திற்கு சஸ்மிதா என்ற மகளும், அக்சை என்ற மகனும் உள்ளனர். என் மருமகன் ராஜா போர்வெல் வண்டியில் வெளிநாட்டில் வேலை செய்து வருகிறார். என் மகன் பலராமனுக்கு திருமணம் ஆகி என்னுடன் உள்ளூரிலேயே வசித்து வருகிறார். என் இளையமகள் சின்னப்பொண்ணு என்பருக்கு திருமணமாகி திருப்பூரில்

பாளையக்காடு என்ற ஊரில் வசித்து வருகிறார். சுமார் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு என் இளைய மகள் சின்னப்பொண்ணு வீட்டில் திருப்பூர் மாவட்டம் பாளையக்காட்டில் இருந்தேன். காலை 6.00 மணிக்கு எனது மகன் பலராமன் போனில் தொடர்பு கொண்டு அக்கா சம்பூரணம் எசனையில் அவரது வீட்டில் பேச்சி மூச்சி இல்லாமல் கடப்பதாக பக்கத்து வீட்டு ராஜா என்பவர் சொன்னதாக சொன்னார். பெரம்பலூர் எம்ஜீஆர் நகரில் உள்ள என் தம்பி மகன் மணி என்பவர் வசித்து வருகிறார். அவருக்கு நான் போன் செய்து சித்தி சம்பூரணம் உடம்பு சரியில்லாமல் இருப்பதாக சொன்னேன். ஆம்பூலன்சிற்கு போன் செய்து மருத்துவமனை அழைத்து செல்லுமாறு சொன்னேன். அதன்பின்பு சம்பூரணத்தை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு போயி உள்ளார்கள். அங்கு முடியாது திருச்சிக்கு தான் போக வேண்டும் என்று சொன்னதால் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு சம்பூரணத்தை கொண்டு சென்று சேர்த்துள்ளதாக என் மகன் பலராமன் போனில் சொன்னார். எங்களை திருச்சிராப்பள்ளிக்கு வந்து விடுமாறு சொன்னார். நான் திருச்சிராப்பள்ளிக்கு எனது இளைய மகள் சின்னப்பொண்ணு அவரது கணவர் கலையரசன் ஆகியோருடன் போனேன். நான் அங்கு சென்று பார்த்தபோது என் மகள் சம்பூரணம் பேச்சி மூச்சி இல்லாமல் இருந்தார். கழுத்தில் காயம் இருந்தது. மருத்துவமனையில் எனது பேத்தி சஸ்மிதா , எனது பேரன் அக்சை, என் கணவர் ராமசாமி, என் மகன் பலராமன் , என் தம்பி மனைவி மூக்காயி ஆகியோர் இருந்தாரகள். நான் என் பேரன் பேத்தி ஆகியோரிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். என் பேத்தி சஸ்மிதா, பக்கத்து வீட்டு ராஜா அன்று காலை 5.00 மணியளவில் என் மகள் சம்பூரணத்தை வாடி தேவடியா என்று திட்டிக்கொண்டே வந்ததாகவும், அப்புறம் என் மகள் சம்பூரணத்தின் கழுத்தை ராஜா ஸ்கிப்பிங் கயிற்றால் நெறித்தாகவும் என் பேர பிள்ளைகள் கத்தியதாகவும், கத்தினால் குத்திப்புடுவேன் வெளியே சொல்லக்கூடாது என சொன்னதாகவும் ராஜா ஜன்னல் வழியாக குதித்து ஓடி விட்டதாகவும் கூறினார். 04ம் தேதி

பெரம்பலூர் காவல்நிலைய போலீசார் திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவமனைக்கு வந்து சம்பவம் தொடர்பாக என்னிடம் விசாரித்து என்னிடம் வாக்குமூலம் வாங்கினாரகள். என்னிடம் காண்பிக்கப்படுவது தான் நான் போலீசாருக்கு கொடுத்த வாக்குமூலம் ஆகும். அது **அதசாஆ.** 1 ஆகும். அதில் உள்ள கைரேகை என்னுடையது தான். அதன்பிறகு 07 ம் தேதி எனது மகள் சம்பூரணம் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் அவர் வேறொரு வாய்த கேட்டார்.

**Ending Time: 12.35 PM**